Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 248

சனிக்கிழமை
02 ஓகஸ்ட் 2025

ஆடி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## இலங்கைக்கு 20 வீத வரி தளர்த்தியது அமெரிக்கா

கொழும்பு, ஓக. 2
இலங்கைக்கு எதிராக 20 வீதமான வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப்

☞ 11

## செம்மணியில் விபத்து: வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில்

☞ 11

மக்களின் பார்வைக்கு வைத்து

# செம்மணி சான்றுப்பொருள்களை அடையாளப்படுத்த நடவடிக்கை!




### புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் அனுமதி

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2**

**யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட சான்றுப்பொருள்களை மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தி அவற்றுக்கு உரியவரை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

☞ 11

## செம்மணிப் புதைகுழியில் மேலும் 4 என்புத்தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் நான்கு என்புத்தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 27ஆம்

☞ 11

செம்மணியில் நாளைமறுதினம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு புதைகுழிகளைப் பார்வையிடும்!

யாழ்ப்பாணம், ஓக. 2
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நாளைமறுதினம் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 11

## இணையத்தின் ஊடாக இனி காணி வரைபடம்

கொழும்பு, ஓக. 2
பொதுமக்கள் தமது காணிகளின் வரைபடங்களை இணையத்தளங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று நில அளவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நில அளவைத் திணைக்களத்தின் 225ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு உரையாற்றும்போதே நில அளவையாளர்

☞ 11



## இராணுவத்தின் 'பவுஸர்' கோண்டாவிலில் விபத்து

விரிவு பக்கம்:- 11

## நீதிமன்ற விசாரணைக்குச் சென்றவரை கத்திமுனையில் கடத்தித் தாக்குதல்!

மன்னாரில் போதைக்குழு வெறிச்செயல்

மன்னார், ஓக. 2
மன்னார் - தலைமன்னார் பகுதியில், தனியார் பேருந்தொன்றை வழிமறித்த குழுவொன்று நபரொருவரைக் கத்திமுனையில் நேற்றுமுன்தினம் கடத்திச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளது.
மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு

☞ 11





யாழ்ப்பாண விகாரைகளுக்கு

## ஆன்மீகப் பயணம் வந்த தேரர் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாணத்தில் உள்ள தலங்களுக்கு பயணம் மேற்கொண்ட தேரரொருவர், யாழ்ப்பாணத்தில் உள்ள விகாரையொன்றில் நேற்றுக் காலை

☞ 11

**முச்சந்தி முரளி**

**'கரைப்பார் கரைச்சால் ட்ரம்பும் கரைவார் கண்டியளோ'**

முதலீடுகளைப் பெறுவதற்காக

## புலிகளைப் பலப்படுத்தியோரை கொண்டாடுகின்றது அரசாங்கம்



நாமல் ராஜபக்ச ஆவேசம்

கொழும்பு, ஓக. 2
புலிகளுக்கு நிதி வழங்கியவர்களை நாட்டின் முதலீட்டாளர்களாகப் பார்க்கும் நிலையிலேயே ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளது - இவ்வாறு நாமல் ராஜபக்ச குற்றஞ்

☞ 11

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும்

## வடக்கு மக்களின் வாழ்வில் எந்த மாற்றங்களும் இல்லை



கடற்றொழில் அமைச்சர் ஆதங்கம்

கிளிநொச்சி, ஓக. 2
போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்துள்ள போதிலும் வடக்கு மக்களின் வாழ்க்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

☞ 11

மக்கள் ம[illegible]ழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4150
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 24 48 73 74
விசேட எழுத்து V

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1217
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 03 06 29 38

**NLB ஜய**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0176
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 4 5 6 0

**மெகா பவர்**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2256
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 23 34 44 59

**மஹஜன சம்பத**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5908
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 0 7 5 0 2 4

**தன நிதானய**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1938
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 29 30 33 72
விசேட எழுத்து P

**அத சம்பத**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0483
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 5 0 2 4

**சுப தவசக்**
திகதி 01.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0024
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 04 08 15 50

# மன்னார் வளங்களைக் காக்க புதன், வியாழனில் போராட்டம்

## மன்னார் இளையோர் அழைப்பு

**மன்னார், ஓக.2**

**பல்தேசியக் கம்பனிகளின் கனியவளச் சுரண்டலால் பாதிக்கப்படும் மன்னார் மாவட்டத்தின் இருப்பையும் பூர்வீக நிலத்தையும் பாதுகாக்க மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அடையாள விழிப்புணர்வுப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.**

மன்னாரின் இயற்கை வளங்களில் ஒன்றான மணல் விசேடமாக இல்மனைற் கனிமத்தை கொண்டதாக உள்ளதால் அதற்கு உலகளவில் பரந்துபட்ட கேள்வியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அவுஸ்திரேலிய பல்தேசிய நிறுவனம் ஒன்று இல்மனைட் மணலை அகழ்ந்து எடுக்க முயற்சித்துவருகின்றது. ஆனாலும் அதற்காக அனுமதிகள் இழுபறியில் இருந்துவந்த நிலையில் இந்த அரசாங்கத்தினால் அது வழங்கப்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது. அவுஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் ஆய்வு அறிக்கைக்காக சுற்றுச்சூழல் அதிகாரசபையிடம் விண்ணப்பித்திருந்த நிலையில் அந்த நிறுவனம் ஆய்வுசெய்து சாதகமான அறிக்கை வழங்கியுள்ளது. இவ்வாறு பல்தேசிய நிறுவனங்கள் மன்னாரின் இல்மனைட் மணலை அகழ்ந்தெடுத்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மக்கள் வாழும் நிலங்களுக்குள் கடல்நீர் உட்புகுந்து மக்களின் இருப்பை கருவறுத்துச் சென்றுவிடும்.

இதனைத் தடுப்பதற்கு இளையோராகிய நாம் வீதிக்கு இறங்கவுள்ளோம். எமது இந்தப் போராட்டத்துக்கு மன்னார் மாவட்ட மக்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். போராட்டத்தின் இறுதியில் மன்னார் மாவட்டச் செயலரிடம் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளோம் என்றும் போராட்டக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 27)

**சுபிரி தன சம்பத**
வெற்றி வாரம் 0616
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 9 2 8 6 5 6

**Super Ball**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2882
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 08 14 15 33

**சனிதா**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 52 53 56 58
வெற்றி வாரம் 5043

**SASIRI**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0738
வெற்றி இலக்கம் 18 25 38

**லக்ன ராசி**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 31 39 41 58
சீட்டிழுப்பு வாரம் 4594

**KAPRUKA**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 34
வெற்றி இலக்கம் 65 67 69 70
வெற்றி வாரம் 2058

**அத கோடிபதி**
திகதி 01.08.2025
தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 45 74 75 76
வெற்றி வாரம் 2708

# ஓய்வூதியச் சலுகை 'கட்' அரசியல் பழிவாங்கலே!

கொழும்பு, ஓக.2

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய ஓய்வூதியம் உட்பட வரப்பிரசாதங்களை இல்லாது செய்வதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கை அரசியல் பழிவாங்கல் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் பேச்சாளரான சட்டத்தரணி மனோஜ் கமகே இதுதொடர்பில் தெரிவிக்கையில்,

நாட்டு மக்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கையில், அவற்றுக்குத் தீர்வுகளைத் தேடாமல், முன்னாள் ஜனாதிபதிகள்மீது அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வரப்பிரசாதங்களை வழங்கும் நடைமுறை உலக நாடுகளில் உள்ளது. எனவே, முன்னாள் ஜனாதிபதிகளை பழிவாங்கும் நோக்கில் இங்கு சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது- என்றார். (ச-44)

# தமிழக மீனவர்கள் விளக்கமறியல் நீடிப்பு

மன்னார், ஓக.2

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களின் நீதிமன்றக் காவலை எதிர்வரும் 14ஆம் திகதி வரை நீடித்து மன்னார் மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த ஜூலை 21 ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 4 ராமேஸ்வரம் மீனவர்களையே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-35)


வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின்

# வாகனத்துடன் மோதுண்டு 3 மாடுகள் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக.2

வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பயணித்த வாகனத்துடன் மோதுண்டு மூன்று மாடுகள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன.

இந்த விபத்து கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரந்தன் - முல்லைத்தீவு வீதியின் இரண்டாவது மைல்கல் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

கட்டாக்காலி மாடுகள் திடீரென வீதியின் குறுக்கே சென்றமையால் இந்த விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ச-28,214,113)

# மாகாணசபைத் தேர்தலை முடிந்தால் நடத்திக்காட்டுக!

## ஜானக வகும்புர தெரிவிப்பு

கொழும்பு, ஓக.2

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகிறது. மாகாணசபைத் தேர்தலை நடத்துமாக இருந்தால் நிச்சயம் தோல்வியடையும் என்று முன்னாள் அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசு நல்லவற்றைச் செய்தால் நாம் அரசை எதிர்க்க மாட்டோம். கோத்தாபய ராஜபக்சவுக்கும் மக்கள் ஐந்து வருடங்களுக்குத்தான் ஆணை வழங்கினார்கள். ஆனால், இரண்டு வருடங்களில் வீதிக்கு இறங்கி அவரை விரட்டினார்கள்.

இந்த அரசாங்கம் ஏதாவது செய்யும் என்று மக்கள் இன்னும் எதிர்பார்ப்பு வைத்துள்ளனர். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுங்கள். வீழ்ந்த நாடு கட்டி எழுப்பப்படவேண்டும்- என்றார். (ச-75)

# சந்திரசேனவுக்கு பிணை

கொழும்பு, ஓக.2

ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.


நீதிமன்றம் அவரை 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவித்துள்ளது.

சந்தேகநபருக்கு வெளிநாடு செல்வதற்கான தடையை விதித்த நீதிமன்றம், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

எஸ்.எம். சந்திரசேன, அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் உட்பட அதிகாரிகளை மிரட்டி, சோள விதைகளை தனது அரசியல் சகாக்களுக்கு விநியோகித்தார் என அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் மூன்றாம் நாள் மாலை உற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச)

## மஹோற்சவம்!

யாழ்ப்பாணம், ஓக.2

வதிரி, காளையந்தோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 7மணிக்கு சப்பறத்திருவிழாவும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-100)

++++

யாழ்ப்பாணம், ஓக.2

மேலைப்புலோலி பருத்தித்துறை ஆலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 10 தினங்களுக்குத் திருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 9ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும்தொடர்ந்து கொடியிறக்கமும் இடம்பெற்று 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவர் சாந்தியும் இடம்பெறவுள்ளன. ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ சோம.துஸ்யந்தக் குருக்கள் துஜாரோகண மஹோற்சவக் குருவாக செயற்படவுள்ளார். (ச-41-100)

## தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக.2

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் 'தெய்வீகக் கலை அர்ச்சனை' நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை இணுவையூர் சிவ. தணிகாசலம் பஜனைக் குழுவினரின் திருப்புகழ் பஜனை நிகழ்வும், கலாவித்தகர் பரமேஸ்வரன் கௌரீசனின் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ச-41)

## பன்றிக்கேணி கந்தசுவாமி மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.2

தென்மராட்சி மீசாலை அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும் உற்சவம் ஆலயப் பிரதம குருக்கள் பண்டிதர் து.கு. ஜெகதீஸ்வரக் குருக்களின் ஒருங்கிணைப்பில், மஹோற்சவகுருசைவ, ஆகம, கிரியாபானு சிவஸ்ரீ கு.கஜேந்திரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

எதிர்வரும் 7ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் 8 திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-131)

## ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 2

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக அருளுரை இன்று சனிக்கிழமை நான்காவது நாளாக இடம்பெறவுள்ளது.

இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணிவரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு 'மங்கையர் வலையிலிருந்து எப்போது நீங்குவேன்?' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார். (ச-66)

## நல்லூர் வளாகத்தினுள் காலணியுடன் பொலிஸ்



யாழ்ப்பாணம், ஓக.2

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலய பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிலையில் நேற்றுக் காலை பொலிஸ் அதிகாரி ஒருவர் ஆலய வளாகத்தினுள் காலணியுடன் நடமாடியுள்ளார்.

பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதனால் குறித்த பகுதிக்குள் காலணியுடன் உள்நுழைவதற்கு அனுமதிகிடையாது. மேலும் வெளிநாட்டுத் தூதுவர்களோ, அமைச்சர்களோ, உயர் அதிகாரிகளோ வருகைதந்தால்கூட உரிய முறைப்படி காலணிகளை அதற்குரிய இடங்களில் கழற்றிவிட்டுத்தான் ஆலய வளாகத்தினுள் உள்நுழைவது வழமை. இந்தநிலையில் குறித்த பொலிஸ் அதிகாரி காலணியுடன் உள்ளே நுழைந்துள்ளார். இது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-27)

(ஐந்தாம் திருவிழா)





## நல்லூரான் சிறப்பம்சம்

### நல்லூரானே வழிகாட்டு

எழிலான நல்லூரானே இந்நாட்டு
எல்லோரின் வாழ்விலும் வழிகாட்டு
பொழிவான மயிலேறி பழியோட்டு
புதுவாழ்வை தமிழருக்கு நிலைநாட்டு

தமிழான கடவுளே அருள் கேட்டு
தாள்களைப் பணிகிறோம் வழிகாட்டு
அமிழ்தான தமிழாலே உனைவேண்டி
அவனியில் வாழ்கிறோம் ஒளிகாட்டு

**மதுரகவி காரை.எம்.பி அருளானந்தம்**

### குறைதீர்ப்பாய் கந்தா

குறைதீர்ப்பாய் கந்தா
தேவர் குறை தீர்த்தவனே வேலய்யா
தேடி வந்தோம் உந்தன் பாதம் பாருமய்யா
செம்மணி சித்துபாத்தி பாத்திடப்பா
செந்நீரில் கலந்த இடம் அதுதானப்பா
எங்கள் குறை தீராயோ மயில் வாகனனே
ஏங்கி உமை வேண்டுகின்றோம் பக்தரெல்லாம்
அரக்கனை அழித்தவனே அழகா முருகா
அல்லலுறுகின்றார் அடியவரெல்லாம் பார்த்தே விடு
நல்லூர்ப்பதியருகே நடக்கலாமோ
நாடியுமை வந்துவிட்டோம் ஓடிவாவேன்
குழந்தைகளும் புதையுண்டார் வனிதையரும்
புதையுண்டார்
குழந்தைவடிவாய் வந்து பதில் தாருமய்யா
இனிமேல் வேண்டாமப்பா இந்தக்கொடுமை
இந்திரற்கு அருள் ஈந்த குகனே பாலா

**ப.ப஌சியா**
தரம் 12
வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை,
யாழ்ப்பாணம்.

### மூடர்களை மன்னிப்பாய் முருகனே!

தேவர் சிறைமீட்ட தேவசேனாதிபதியே!
தேவி பார்வதியிடம் வேல் பெற்ற வேலவனே
உன் வீதி தனிலே மணல்பரப்பி வழிபடவே
தடையிடும்மூடர் மனம்மாற அருள்வாயே

கள்ளமணல் கவருகையில் தடையேதும் இல்லை
கள்ளமரம் தறிக்கையிலே தடையேதும் இல்லை
நல்லைவீதி மணல்பரப்ப தடைபோடும் மூடர்களை
நல்லையம் பதிமுருகனே மன்னித் தருளுமையா

கள்ளங் கபடமனக் கதிரைக் கண்டவுடனே
எள்ளளவும் மக்கள் சேவை ஏற்றி நெஞ்சில் வைக்காத
புல்லர்கள் ஆட்சிசெய்யும் பருத்தி சபைதனிலே
நல்லோர் நல்லாட்சி செய்யவருள் செய் முருகனே!

**- கவிஞர் சரசாலையூரான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குத் தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளையசகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகளைப் பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்குமேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.



## வவுனியாவில்

# பரசூட் முறை நெற்செய்கை இரட்டிப்பு விளைச்சல்

வவுனியா, ஓக. 2

வவுனியாவில் தாண்டிக்குளம் பகுதியில் பரசூட் முறை மாதிரி நெல் விதைப்பு செயற்றிட்டத்தின்மூலம் வெற்றிகரமான விளைச்சல் பெறப்பட்டுள்ளது.

பரசூட் முறைப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் வழமையான பாரம்பரிய நெல் விதைப்புக்குப் பதிலாக பரசூட் முறையைப் பயன்படுத்தி 60 ஏக்கரில் நெல் நாற்றுகள் நடப்பட்டன. புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த முறைமைமூலம் அறுவடையில் நெல் இரட்டிப்பாகியுள்ளது.

அறுவடை நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலாளர் பி.ஏ. சரத்சந்ர தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-41-110)



# குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிர்மாய்த்துக்கொண்டுள்ளார்.

குறித்த நபர் மனவிரக்தியால் தவறான முடிவெடுத்து உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளைக் கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ச-26, 20)

# சிறுகதை நூல்களின் உரையாடலும் தேநீர் விருந்தும்

யாழ்ப்பாணம், ஓக.2

ஆதவன் சரவணபவன் எழுதிய 'குல்லமடை', 'ஒற்றைமைனா' இரண்டு சிறுகதை நூல்களின் உரையாடலும் ஒரு தேநீர் விருந்தும் இன்று சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்ப்பாணம் 18/2 திருவடிநிழல், அம்மன் வீதியிலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஐ.சாந்தனின் ஒருங்கிணைப்பில் நடைபெறும் நிகழ்வில் 'குல்லமடை' நூல் பற்றி சி.ரமேஸ், 'ஒற்றை மைனா' நூல் பற்றி சு.குணேஸ்வரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். தொடர்ந்து தேநீர்விருந்து இடம்பெற்று நிறைவுரையை நூலாசிரியர் ஆதவன் சரவணபவன் நிகழ்த்துவார். (ச)



# முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.2

முன்பள்ளிச் சிறார்களிற்கு 65 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடுமூலம் சத்துணவு வழங்கும் திட்டம் மானிப்பாய்ப் பிரதேசசபையால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஓர் அங்கமாக மானிப்பாய் மேற்கு அரும்புகள் முன்பள்ளிச் சத்துணவுத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

நிகழ்வில் வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தன், பிரதேசசபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம்குமார் ஆகியோர் கலந்துகொண்டு முன்பள்ளிச் சிறார்களிற்கு சத்துணவை வழங்கி ஆரம்பித்து வைத்தனர். (41-27)

# எரிவாயு திருட்டு

யாழ்ப்பாணம், ஓக.2

வீட்டில் ஆள்கள் இல்லாத வேளை வீடொன்றுக்குள் நுழைந்த திருடன் அங்கிருந்த சமையல்எரிவாயு சிலிண்டரைத் திருடிச் சென்றுள்ளான்.

இந்தச் சம்பவம் கோப்பாய் வடக்கில் நேற்றுமுன்தினம் பகல் வேளை நடந்துள்ளது.

திருடன் எரிவாயு சிலிண்டரை எடுத்துச்செல்வது அங்கிருந்த சி.சி.ரி.வி.கமராவில் பதிவாகியுள்ளது. (ச-41-17)



# சிறுவர் பூங்கா திறந்துவைப்பு!


கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் உலகப் பார்வை நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்- கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், உலகப் பார்வை நிறுவனத்தின் கரைச்சி, கண்டாவளைப் பிரதேசத் திட்ட முகாமையாளர் மக்டலின் குயிண்டஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மனித எச்ச மீட்புப்பகுதியில் சட்டத்தரணிகள் குழாம் ஆராய்வு!

**திருகோணமலை, ஓக.2**

**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான மையத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இரட்ணவேல் தலைமையில் சட்டத்தரணிகள் குழாம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சம்பூர்ப் பகுதியில் மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிக்குச் சென்று குறித்த பகுதியைப் பார்வையிட்டதோடு அந்தக் கிராம மக்களுடனும் உரையாடினர்.**



சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோரப் பகுதியில் மிதிவெடி அகற்றும் நிறுவனமொன்று மிதிவெடி அகற்றுவதற்கான அகழ்வுப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பகுதியில் இருந்து சிதைந்த மனித மண்டை ஓடு மற்றும் எலும்புப்பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் தொல்லியல் திணைக்களத்திடம் குறித்த பகுதியில் அகழ்வுப் பணியை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக கடந்தபுதன்கிழமைஅறிக்கை பெறப்பட்டது.

அதன்படி எதிர்வரும் 6 ஆம் திகதி குறித்த இடத்தில் அகழ்வுப்பணியை மேற்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பாக ஆராய்வதற்கான சட்டமாநாடு ஒன்றை நடத்துவதற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-50)

## சின்ன வெங்காயம் விலை திடீர்ச் சரிவு

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை சடுதியாகச் சரிவடைந்துள்ளது.

சின்ன வெங்காய அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

அதிக விளைச்சல் பெற்றுள்ள சின்ன வெங்காயம் அதிகளவில் சந்தைகளுக்கு வந்துசேர்வதால் அவற்றின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.

முன்னர் கிலோ 400ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ 250ரூபாவாகச் சரிவடைந்துள்ளது. (ச-41-17)

## புலிப் புலம்பெயரிகளை திருப்திப்படுத்தும் அரசு!

### வசந்த பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஓக.2

புலிகளின் போர்ப்பலத்தைக் கடற்படையினரே இல்லாது செய்தனர். அதனால்தான் கடற்படைமீது புலம்பெயரிகள் வைராக்கியத்துடன் உள்ளனர். அவர்களைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையாகவே படையினர்மீது போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறு தேசிய ஒருங்கமைப்புக்குழு உறுப்பினரான வசந்த பண்டார தெரிவித்தார்.

இதன் ஓர் அங்கமாகவே முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைதுசெய்யப்பட்டுள்ளார். படையினரின் கட்டளையிடும் ஆற்றலை சவாலுக்குட்படுத்தும் வகையில் இது உள்ளது.

புலிகளின் எட்டு விநியோகக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. இறுதிக்கட்டத்திலும் தப்பியோட இடமளிக்கப்படவில்லை. புலிகளின் போர்ப்பலத்தை இல்லாது செய்வதற்கு கடற்படையினரின் பங்களிப்பு அளப்பரியது - என்றார். (ச-44)




## லிட்ரோ, லாப்ஸ் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஓக.2

2025ஆம் ஆண்டின் ஓகஸ்ட் மாதத்துக்கான லாப்ஸ் எரிவாயு விலையில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பணிப்பாளர் நிரோஷன் ஜே.பீரிஸ் தெரிவித்துள்ளார். அதேவேளை ஓகஸ்ட் மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது விற்பனை செய்யப்படும் விலையிலேயேதொடர்ந்தும்விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## இலங்கைக்குக் கடத்தவிருந்த 240 கிலோ கஞ்சா பறிமுதல்!

சென்னை, ஓக.2

இலங்கைக்கு கடத்துவதற்கென 7 மூடைகளில் பதுக்கிவைத்துக் கொண்டுவரப்பட்ட 240 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதோடு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த வாகனச் சாரதி ஒருவரே தூத்துக்குடி மாவட்டம் வேம்பார்க் கடற்கரையில் வைத்து தமிழகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த கஞ்சாவை இலங்கைக்கு படகுமூலம் கடத்த முயன்றமை தெரியவந்தது. இதன் சர்வதேச மதிப்பு ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (ச-56)






## கூவுறதில நியாயமில்லை!

காய்க்கிற மரத்துக்குத்தான் கல்லெறிவிழும். ஆனால் காசு காய்க்கிற மரத்துக்குக் கல்லெறிவிழாது. ஏனென்டால் அதைக் காவல் காக்கிறதுக்கும், கல்லெறியிற ஆக்களைக் கடிக்கிற ஏவல்நாய்களுக்கும் காசைக் கொட்டிக்குடுப்பினம். அதால இப்பிடிக் காசுகாய்க்கிற மரங்களுக்குக் கிட்ட ஆரும் போகேலாது கண்டியளோ. அப்பிடித்தான் இப்ப காசில பிரண்டு எழும்பிற தனியார் ஆஸ்பத்திரியளைப் பற்றி ஒண்டுமே கதைக்காமல், அரசாங்க ஆஸ்பத்திரியளை மட்டும் குறிவைச்சுசிலர் தாக்கிக்கொண்டு இருக்கினம்.

வடக்கில இருக்கிற பிரைவேட் ஆஸ்பத்திரியளில கனக்கப் பிரச்சினையள் இருக்கு. சில பிரைவேட் ஆஸ்பத்திரியளில அரசாங்க ஆஸ்பத்திரியைவிட கவனிப்பும், அக்கறையும் கூட இருக்கிறதையும் சொல்லத்தான் வேணும். ஆனால் பெரும்பாலும் காசு கறக்கிறதையும், கண்டபடி அந்த ரெஸ்ட்டிங் இந்த ரெஸ்ட்டிங் எண்டு செய்விச்சு, வலிஞ்சு வருத்தக்காரராக்கிறதையும் உந்த பிரைவேட் ஆஸ்பத்திரியள் செய்துகொண்டிருக்குதுகள். இஞ்சையுள்ள பிரைவேட் ஆஸ்பத்திரியில ஒப்பிரேசன் செய்யேக்க, பண்டேஜ் துணியையும் சேர்த்து வயித்துக்க வைச்சுத் தைச்சு, அது இன்பெக்ஷன் ஆக்கி செத்த சம்பவம் எல்லாம் நடந்திருக்கு. வேற ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரியில பிழையான மருத்துவத்தால பிள்ளைத்தாச்சி ஒராளும், வயித்தில இருந்த பிள்ளையும் செத்ததும் வடக்கிலதான் நடந்திருக்கு.இதெல்லாம் வெளியால தெரியவந்த சில சம்பவங்கள். இதைவிட வெளியில தெரியவராமல், மூடிமறைச்ச கனக்க சம்பவங்கள் உந்தப் பிரைவேட் ஆஸ்பத்திரியளில இப்பவும் நடந்துகொண்டுதான் இருக்குது. அதைவிட அரசாங்க ஆஸ்பத்திரிக்கு வாற வருத்தக்காரரை, "பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு வாங்கோ, மினக்கெடாமல் வடிவா ட்ரீட்மெண்ட் செய்து மாத்தலாம்" எண்டு சாய்ச்சுக்கொண்டு போய், காசு கறக்கிற விளையாட்டையும் ஒருத்தரும் கண்டுகொள்ள மாட்டினம். ஆனால், பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போய் காசு உழைக்கிறதைவிட , சனத்துக்கு அரசாங்க ஆஸ்பத்திரியில நல்ல ட்ரீட்மெண்ட் குடுக்கோணும் எண்டு பாடுபடுறவையை மட்டும், ஏதும் சின்னப் பிழையளைக் கண்டுபிடிச்சோ இல்லாட்டி சரியா நடக்கிறதையும் பிழை மாதிரிக் காட்டியோ பிரச்சினையெடுக்கிறதில என்ன நியாயம் இருக்கு?

ஆஸ்பத்திரியளில நடக்கிற அநியாயங்களைத் தட்டிக் கேக்கவேணுமெண்டால், அதில பாரபட்சம் இருக்கக் கூடாது. பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்கு ஒரு நீதியும், அரசாங்க ஆஸ்பத்திரியளுக்கு இன்னொரு நீதியும் காட்டுறது பிழையானவேலை. ஆர் பிழை செய்தாலும் அதைத் தட்டிக்கேக்கோணும். அதைவிட்டிட்டு இளகின இரும்பை மட்டும் அடிக்கிற கொல்லர்மாதிரி , அரசாங்க ஆஸ்பத்திரியளில மட்டும் பிழைபிடிச்சு அதைப் பூதாகரமாக்கிவெளிலகத்தித் திரியிறவைக்கு ஒரு உள்நோக்கமும் இருக்கு. அவையள் "அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போனால் வருத்தம் மாறாது.அங்க போனால் உயிரே போடும்" எண்ட மாதிரி பூச்சாண்டி காட்டினால், சனமும் அதை நம்பி "காசு போனாலும் பரவாயில்லை,உயிர்தான் முக்கியம்" எண்டு பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்குத்தானே போவினம். அதுக்காகத்தான் இப்பிடி மூலம் தள்ளத் தள்ள, அரசாங்க ஆஸ்பத்திரியளுக்கு எதிரா மட்டும் சிலர் குற்றம் குறை சொல்லிக்கொண்டிருக்கினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்

21 . 10 . 1955



மறைவு

27 . 07 . 2025

## நல்லையா ஜெயவீரசிங்கம் (தங்கன்)

**(பிரபல தொழிலதிபர் - SNJ Travels, SNJ Transport மற்றும் SNJ Group (Sri lanka) and Thirumalaiyan Tours and Travels (India))**

கரணவாய் வடக்கு நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மற்றும் சென்னை இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட நல்லையா ஜெயவீரசிங்கம் (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - செல்வராணி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், வளர்மதி (மதி) யின் ஆசைக்கணவரும், வதனா (லண்டன்), நிருபனா (இந்தியா), மதுஜா (கனடா), சிந்துஜன் (லண்டன்), கோபிகா (லண்டன்), ராதிகா (பிரான்ஸ்), கீர்த்திகா (கொழும்பு), வகீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவருட்செல்வன் (லண்டன்), ராஜ்குமார் (இந்தியா), நிருபாகரன் (கனடா), கீர்த்திகா (லண்டன்), சர்வானந்தராஜா (பிரான்ஸ்), பிரபாகரன் (கொழும்பு), ரஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிஷ், தர்வின், பிரதன்யா, நேகா, விகானா, கிவ்யா, நிரோகா, சாருஜன், சிவானுஜன், தருணிகா, சஞ்சனா, ஹரிகரன் ஆகியோரின் பேரனும், விஜயராணி (பிரான்ஸ்), ராஜேஸ்வரி (கனடா) காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், தர்மகுலசிங்கம் மற்றும் சோதிமலர் (வவுனியா), பத்மராணி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவநாதன், பாலசுப்ரமணியம் மற்றும் மங்கையகரசி, விஜயலட்சுமி, நகுலேந்திரராஜா, கணேசன், காலஞ்சென்ற நடராஜா மற்றும் இரஞ்சிதமலர், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, கனகலிங்கம், பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் கண்டி வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

**நிருபனா - 077 379 7127 (மகள்)**
**ராஜ் - 077 693 3255 (மருமகன்)**
**பத்மராணி (பேபி) - 077 071 9437 (தங்கை)**

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# கல்விச் சீர்திருத்தமும் விற்றமின் 'டி' குறைபாடும்!

இலங்கையில் பல்லாயிரம் மாணவர்கள் விற்றமின் 'டி' குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று எச்சரித்திருக்கின்றனர் துறைசார் மருத்துவ நிபுணர்கள். இதயநோய், புற்றுநோய், நீரிழிவு நோய் என்பன விற்றமின் 'டி' குறைபாட்டால் ஏற்படும் பிரதான நோய்களாகக் காணப்படுகின்றன. ஆதலால், மாணவர்கள் மத்தியில் அவதானிக்கப்பட்டிருக்கும் இந்தப் பின்னடைவான நிலைமை பேராபத்தானது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது மருத்துவத்துறை. உயிர்ச்சத்துகளில் விற்றமின் 'டி' மிகவும் முக்கியமானது. அதேநேரம், அதிகளவில் கவனம் செலுத்தப்படாத - கவனம் செலுத்தப்பட வேண்டிய விற்றமின்களிலும் விற்றமின் 'டி' பிரதான இடத்தைப் பெறுகின்றது. ஈரல், முட்டை, மீன் ஆகிய உணவுக்கூறுகள்மூலம் விற்றமின் 'டி' கிடைக்கின்றபோதிலும், அதை மிகமிக இலகுவாகப் பெறும் வழி சூரியவெளிச்சம்தான். இன்றைய மாணவர்கள் நான்கு சுவர்களுக்குள் தமது வாழ்க்கையைக் கட்டமைக்கப் பழகிவிட்டனர். பாடசாலை, பாடசாலை முடிந்ததும் மேலதிக வகுப்பு, மேலதிக வகுப்புகள் முடிந்ததும் தொடுதிரை விளையாட்டுகள் என்று அவர்களின் வாழ்க்கை 'இயந்திரச் சுழற்சிக்கு' உட்பட்டிருக்கின்றது. எனவே, இந்த மருத்துவக் குறைபாட்டில் இருந்து மாணவர்களை விடுவிக்கவேண்டுமாயின், விரிவான மறுசீரமைப்புகளை - சீர்திருத்தங்களை நாங்கள் மேற்கொள்ளவேண்டும்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய, நாட்டின் கல்விமுறைமையை கல்விக் கட்டமைப்பை முற்றாக மறுசீரமைக்கும் வகையில் தற்போது செயற்பட்டுவருகின்றார். அந்த மறுசீரமைப்பில் இந்த விற்றமின் 'டி' குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வேலைத்திட்டங்களும் பிரதானமாக இடம்பெறவேண்டும். கல்வி மறுசீரமைப்பில் எவ்வாறு விற்றமின் 'டி' குறைபாட்டை நிவர்த்தி செய்வது? என்ற கேள்வி பலருக்கும் எழலாம். இந்தக் கேள்விக்கான பதில்தான் மைதானக் கற்றல். அனைத்துப் பாடசாலைகளிலும் பாடவேளையின்போது ஆசிரியர்கள் விளையாட்டின் அவசியம் குறித்து எடுத்துக்கூறி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். பாடசாலைகள் நிறைவடைந்ததும் மைதானங்களைப் புறக்கணித்து மேலதிக வகுப்புகள், தொடுதிரை விளையாட்டுகள் என்று சுழன்றுகொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஏற்படும் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பில் பெற்றோர் சந்திப்புகளிலும் போதிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இவற்றைப் பாடசாலைகள் மூலம் மேற்கொள்வது மிகச் சுலபம். இதுதவிர, பாடசாலைகளில் முடிந்தவரை மாணவர்களை மைதானங்களுக்கு அழைத்துச்செல்லக்கூடிய வகையில் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். காலைவேளைப் பிரார்த்தனைகளை ஒன்றுகூடல்களை சூரியவெளிச்சம் மாணவர்களுக்குப் படக்கூடிய வகையில் ஒழுங்கமைத்தல் இன்னும் உசிதம். இடைவேளையில் மாணவர்கள் வகுப்பறைக்குள் தங்கியிருப்பதை முற்றாகத் தடைசெய்து, அவர்கள் பொதுவெளிகளிலும் மைதானங்களிலும் உலவுவதைக் கட்டாயமாக்கவேண்டும்.


விற்றமின் 'டி' யினை அடிப்படையாக வைத்து, மருத்துவத்துறை எச்சரித்திருக்கும் அபாய ஒலிக்கான அனைத்துத் தீர்வுகளும் பாடசாலைக் கட்டமைப்பில்தான் உள்ளன. அதைக் கல்வி மறுசீரமைப்பின் ஊடாகவாவது நாங்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும். இதற்குப் பெற்றோர் பொறுப்புணர்வதும் அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றுப் போய்விடுகிறது.

– நெப்போலியன்–



# தனிநபர் மின்பாவனை இவ்வாண்டில் அதிகரிப்பு



கொழும்பு, ஓக.2

நாட்டில் ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின் சாரத்தின் அளவு அதிகரித்துள்ளதாக மின் சாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 700 கிலோவாற் ஆக அதிகரித்துள்ளது. இது மின்சாரத் தேவையின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

2023ஆம் ஆண்டில் ஒருதனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 642 கிலோவாற்றாகக் காணப்பட்ட நிலையில் 2024ஆம் ஆண்டில் 693 கிலோவாற்றாக பதிவாகியுள்ளது.

ஆனால் 2025ஆம் ஆண்டில் தனிநபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு அதிகரித்துள்ளது.

நவீன காலத்தில் பெரும்பாலான வீடுகளில் மின்விளக்குகள், குளிர்சாதனப்பெட்டிகள், மின்விசிறிகள் உள்ளிட்ட பல மின் உபகரணங்கள் உள்ளன. மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் அதிகளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றனர். மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நாட்டின் டிஜிற்றல் மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இது அரசாங்கத்தின் நிலையான எரிசக்தி மாற்றத்திற்கான உறுதிப்பாட்டையும் மேம்படுத்துகின்றது என இலங்கை மின்சாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஆறு மாதங்களில் 300 பொலிஸார் இடைநீக்கம்!

கொழும்பு, ஓக.2

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 300 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். ஓர் அரசாங்கம் என்ற வகையில், எந்தவொரு நபருக்கும் எதிராக, அவர்களின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அரசஊழியர்கள் செய்யும்தவறுகள்முழுபொதுச் சேவையையும் களங்கப்படுத்தும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)




## ரூ.225 மில்லியன் வரி ஏய்ப்பு பியூமி மீது பாய்கிறது வழக்கு!

கொழும்பு, ஓக.2

225 மில்லியன் ரூபா வரி ஏய்ப்பில் ஈடுபட்டார் என பிரபல அழகி பியூமி ஹன்சமாலிமீது வழக்குத் தொடரப்பட உள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'அவுரா லங்கா' நிறுவனத்தின் தலைவர் விரஞ்சித் தாம்புலாகல மற்றும் பியூமி ஹன்சமாலி ஆகியோர் சுமார் 42 கோடி ரூபா வரித்தொகையை செலுத்தத் தவறியுள்ளனர் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு செலுத்தப்படாத வரிக்கான அபராதம் மற்றும் வட்டி என்பனவற்றுடன் வரித்தொகையை அறவீடு செய்யும் நோக்கில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)




## தங்கம் விலை சரிவு

இலங்கையில் கடந்த சில மாதங்களாக தங்கத்தின் விலையானது சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகின்றது. நேற்றைய நிலவரத்தின்படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 996,068 ரூபாவாக காணப்படுகின்றது. அதன்படி 24 கரட் தங்கம் 281,100 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. 22 கரட் தங்கம் 257,700 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)

# வெளிநாட்டு வேலைமோசடி 567 நீதிமன்ற வழக்குகள்!

கொழும்பு, ஓக.2

கடந்த ஏழு மாதங்களில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி செய்தவர்களுக்கு எதிராக மொத்தம் 567 நீதிமன்ற வழக்குகள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன, அதேநேரத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் 2,620 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன. மோசடியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிமம் பெறாத ஆட்சேர்ப்பு நிறுவனங்களில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் சட்ட நடவடிக்கை எடுத்துவருகின்றது. அதேவேளை உரிமம்பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏழு பேர் உட்பட 36 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை - ஆடி 18
03.08.2025
சுபநேரம் : 09.04 - 10.34
ராகுகாலம் : 04.34 - 06.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 01 . 1947



மறைவு
30 . 07 . 2025

### சரவணமுத்து இராசமணி

மந்துவிலை பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கு சாவகச்சேரியை வசிப்பிட மாகவும் கொண்ட சரவணமுத்து இராசமணி கடந்த 30.07.2025 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், ஜெயராசா (லண்டன்), ஜெயரஞ்சிதம், அற்புதராசா (இத்தாலி), ஜெயமதி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மல்லிகா, ஞானசேகரம், லிங்கேஸ்வரி, சிவராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், சரஸ்வதி, இராசதுரை, அருட்செல்வம், தவராசா, அருந்தவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெனுசன், மதுசா, விதுர்சன், வினோதன், கஜானி, அபிசனா, அபிசன், சகிலன், விதுசா, சங்கவி, சாருசன், சஞ்சயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று இந்தியாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:குடும்பத்தினர்.

ஜெயராசா :+44 7588 148811
ஜெயரஞ்சிதம் :077 6914246
அற்புதராசா :+39 334 590 9807
ஜெயமதி :+9199622 98600

(CR 45692) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 09 . 1978



மறைவு
26 . 07 . 2025

### திரு. உமேஷ்திரன் இராமதிலகம்


மானிப்பாய் சுதுமலை வீதியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா சிட்னியை வதிவிடமாகவும் கொண்ட இராமதிலகம் உமேஷ்திரன் அவர்கள் (26.07.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமதிலகம் (இளைப்பாறிய உப அதிபர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) - விமலேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், ஸ்ரீரங்கன் - இராஜேஷ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பிரதீபா அவர்களின் ஆருயிர் கணவரும், சுவேதா, ஸ்ரேயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஷிலேகா, உதிஸ்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசீலன், கமலினி, ரகுநந்தன், சங்கீதா - மகிந்தன், ஆகியோரின் மைத்துனரும், உமா, காயத்திரி - பூர்ணா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஷ்வினி - கல்யான், சஞ்சீவ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், மீரா, மாயா, மிலான் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சாயீஷாவின் பாசமிகு பேரனுமாவார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை Pinegrove Memorial Park - Minchinbury இல் இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### கனகரெத்தினம் சந்தானலெட்சுமி (பூமணி)

### (அன்னக்கிளி உரிமையாளர் - கச்சேரி)

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் சந்தானலெட்சுமி அவர்கள் கடந்த (30.07.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூரணலிங்கம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாராணபிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கிருஸ்ணதாசன் (கனடா), கிருஸ்ணவதி, கிருஸ்ணவேணி (லண்டன்), காலஞ்சென்றவர்களான கிருஸ்ணகுமார், சுரேஸ்குமார் மற்றும் கிசோகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதர்சினிதேவி, வசந்தரூபன் (கனடா), யசோதரன் (லண்டன்), சஜித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரன், தனலெட்சுமி, வரதலெட்சுமி மற்றும் யோகரெத்தினம், காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராசலெட்சுமி, லலிதாம்பாள், காலஞ்சென்றவர்களான நல்லையா, மனோன்மணி மற்றும் சரவணபவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசம்மா, பாலசுப்பிரமணியம், தணிகாசலம், புவனேஸ்வரி, சுகந்தி, காலஞ்சென்ற கதிரமலைநாதன் மற்றும் பரமானந்தன், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் தருமதேவி, காலஞ்சென்றவர்களான கமலாச்சி, குணசிங்கம், வரதலெட்சுமி, பரராஜசிங்கம் மற்றும் நாகலெட்சுமி, சரசலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை, பரமேஸ்வரி, இராசரெத்தினம், நடராசா மற்றும் கோபாலன் ஆகியோரின் அன்பு சகோதரியும், ரஜீவா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஐதுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வினோயன் (யாழ். பரியோவான் கல்லூரி), சுரேக்கா (யாழ். சுண்டிக்குழி மகளிர் கல்லூரி), பவித்திரா(லண்டன்), ஹரிசாந் (லண்டன்), யருசன் (லண்டன்), சகிரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : அன்னக்கிளி குடும்பத்தினர்

தோற்றம்
18.07.1935

மறைவு
28.12.2024

36/3 கச்சேரி நல்லூர் வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

074 242 4906
076 632 5509
077 039 1443

(CS/3737)J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹிதவின் மகளுக்குப் பிணை

கொழும்பு, ஓக.2

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மகளுக்கு மதுகம நீதவான் நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது. சந்தேக நபர் தலா 2 மில்லியன் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப் பட்டார். சந்தேகத்துக்கிடமான வாகனம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் வாகனக்குற்றவியல் தடுப்புப் பிரிவில் சரணடைந்தபோதே அவர் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)


## வீடு வாடகைக்கு

நல்லூரில் அமைந்துள்ள வீடு தொழில் புரிபவர்கள் / மாணவர்கள் குழுவாக தங்குவதற்கு அல்லது குறுகிய கால அடிப்படையில் குடும்பங்கள் வசிப்பதற்கு தளபாட வசதிகளுடன் வாடகைக்கு விடப்படும். மாத வாடகை - 60000 ரூபா.

தொடர்பு:- 075 9799 161/0777 699 212


## திருத்தம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 31.07.2025 திகதிய உதயன், வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட Invitation Bid 2025/11 என்னும் கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்ட வேலை அட்டவணை (Bid ID, Grade Required) இல் பின்வரும் திருத்தம் செய்யப்படுகின்றது.

| Bid ID | Description of Work | Grade Required |
| --- | --- | --- |
| 2025/NP/TSM/02 | Establishment of Movable Food Stalls & Beautification works at Akkarai Beach | C8 or above (Building) |

தலைவர்
பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1945



மறைவு 01 . 08 . 2025

### புஷ்பராணி நாகரத்தினம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட புஷ்பராணி நாகரத்தினம் அவர்கள் நேற்று (01.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டன் - ராணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான காலகண்டன், விடகண்டன் மற்றும் திருநீலகண்டன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபாலகிருஸ்ணனின் அன்புத் தாயாரும், சிவகுமாரியின் பாசமிகு மாமியாரும், ஜெகஜீவன், கம்சாயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
மா.திருநீலகண்டன்
077 778 4880
021 222 3276

383/26, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(CS/59005) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 ◆ 02 ◆ 1940



மறைவு 23 ◆ 07 ◆ 2025

### அமரர் திரு. குணநாயகம் இராஜநாயகம்

இளைப்பாறிய யாழ்ப்பாண கல்லூரி அதிபர்


யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஐக்கிய அமெரிக்கா **North Carolina** ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் இராஜநாயகம் அவர்கள் **23-07-2025** புதன்கிழமை அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்றவர்களான குணநாயகம் முத்தாபரணம் தம்பதிகளின் அன்பு மகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், இராஜினி, இராஜ்மோகன், இராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், **Tyrone,Roushini, Sharon** ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நடனராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், **Rashmita, Timothy, Rithika, Ratchitha, Rishan and Ramitha** ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 02.08.2025, சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு Bright Funeral Home & Cremation Center 405 S Main St, Wake Forest, NC 27587, United States இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
இராஜினி - மகள் (Canada) Mobile: +14169851369
இராஜ்மோகன் - மகன் (America) Mobile: +19192722090
இராஜ்குமார் - மகன் : (Sri Lanka) Mobile: +94771965521

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 02 . 1966



மறைவு 01 . 08 . 2025

### சண்முகலிங்கம் சிவநேசன்

2ம் வட்டரம் நிலாவெளி திருகோணமலையை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் சிவநேசன் அவர்கள் நேற்று (01.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகலிங்கம் - தவமணிதேவி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும், வானதி அவர்களின் அன்புக்கணவரும், சகுந்தலாதேவி, நவநேசன், மஞ்சுளாதேவி, காலஞ்சென்ற செல்வநேசன், வக்சலா, சித்ரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரவீந்திரன், வாசுகி, ரமேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், அனுரதன் (சுவிஸ்), இந்திகா (அவுஸ்ரேலியா), விபுலன் (லண்டன்), துவாரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகா, விதூசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அதீரா, ஆராத்தியா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
1ம் குறுக்குத் தெரு,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 506 0131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டம்

ஊறணி இந்து மயானக்குழு அமைப்பது தொடர்பான கூட்டம் வல்வெட்டித்துறை நகரசபையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில்(மரக்கறிச்சந்தை மேல்மாடி) இடம்பெறும் குறித்த கூட்டத்தில் அனைத்து பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு வல்வெட்டித்துறை நகரசபை கேட்டுக்கொண்டுள்ளது. (ச-100)

## கந்தன்காடு இந்துமயானத்துக்கு தார் வீதி

கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்தினுள்ளே நடைபாதை தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் மயானத்தின் உள்ளக வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சடலங்களை எரியூட்டக் கொண்டு செல்வதற்கு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது மயானத்துக்குள்ளே தார் வீதி போடப்பட்டுள்ளது. (ச-41-17)

## 50ஆம் ஆண்டு நினைவஞ்சலி 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20.02.1928





தோற்றம்
19.04.1933

மறைவு
19.07.1975

மறைவு
02.08.2024

அமரர்
அந்திரேஸ் இன்பநாதன்
(ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்)

அமரர்
இன்பநாதன் கிறிஸ்தீனம்மா

மனதில் என்றும் மலர்வாய் நீங்கா நினைவுகள்
அன்பும், சீரமையும் தியாகமும் நிறைந்த
உங்கள் இருவரினதும் வாழ்க்கை
எங்களுக்கு வழிகாட்டி
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களோடு வாழ்கின்றன.

நினைவுகளுடன்
அருமைப் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

2, இராசாவின் தோட்ட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

CS/3710) J-1

## காணவில்லை

### இராஜகோபாலபிள்ளை வைரவநாதன்



ஆகிய இவர் நேற்று (01.08.2025) முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் கோவில் ஆலய வீதியில் காணாமல் போய்விட்டார்.

வயது 79, பொது நிறத்தை உடைய இவர் மாறு கரை வேட்டி சாம்பல் நிற சேட், மற்றும் கதிரேசன் கோவில் கொழும்பு-13 கும்பாபிஷேகம் என எழுதப்பட்ட சால்வையும் அணிந்திருந்தார்.

இவரை கண்டவர்கள் கீழ் தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

**076 033 4321, 075 2021 964**

(CS 3743) A

தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து) -கைதடி

## வேலை வாய்ப்பு !


### பேக்கரி வாஸ் (உற்பத்தியாளர்)

எமது சங்கத்தினால் நடாத்தப்படும் கூட்டுறவு வெதுப்பகத்திற்கு அனுபவமுள்ள பேக்கரி வாஸ் இருவர் (02) தேவையாக உள்ளது.
விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு - 021 205 7004 / 077 952 5331**

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி -
பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)
மானிப்பாய் வீதி,
கைதடி.

## மரண அறிவித்தல்



### தம்பிமுத்து வடிவேலு

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)

தோற்றம் 18.11.1931 — மறைவு 30.07.2025

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து வடிவேலு கடந்த 30.07.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராசசிறி, பாலசிறி (கனடா), விஜயசிறி (நோர்வே), உதயசிறி (ஜேர்மனி), சிவசிறி (நோர்வே), சசிலசிறி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுவேந்திரன் (சிறி), வசந்தராணி, (கனடா), அஜந்தா (நோர்வே), ஜெயந்தி (ஜேர்மனி), பூமா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜீவசுதன் - ஜெனிபர் (நோர்வே), துவாரகன்- சங்கீர்த்தனா (பிரான்ஸ்), பௌத்திரன் - தர்சனா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தென்மராட்சி), சகீலன், கவிசா, பானுசா (கனடா), அஜீவன், அகலியா - பிரசாந், நிறோஜன், பதுஜன் (நோர்வே), ஆக்ஷா - பிறேஸ், ருக்ஷா, கனோஜன் (நோர்வே), விதுசா, நிரிஷ், ரெபேக்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கௌதம் டானியேல், ஆதித்யா லியான் (நோர்வே), லேயு, அமலியா (நோர்வே), ஆரூன் (நோர்வே), டியான் ஆகியோரின் பாசமிகு பூட்டனும், நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், சிதம்பரராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு, மீசாலை.
077 0344 487
077 9988 626

தகவல் :
**குடும்பத்தினர்**

(CS 59000) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு...

அறிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக 30 வீதமான வரிவிதிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்று ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த வரிவிதிப்புத் தொடர்பில் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகளை இலங்கை முன்னெடுத்துவந்தது. சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே இலங்கைக்கு எதிரான வரிவிதிப்பை 20 வீதமாக அதிபர் ட்ரம்ப் குறைத்துள்ளார்.

இது தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா விதித்திருந்த வரி கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குரிய பணியை வெற்றிகரமாக முடிப்பதற்கு எமக்கு ஆரம்பம் முதலே தலைமைத்துவத்தையும், ஆலோசனையையும் ஜனாதிபதி வழங்கினார். பல தரப்பினருடன் பேச்சுகளிலும் ஈடுபட்டார். விசேட குழுவையும் அமைத்தார். இந்த விடயத்தில் ஜனாதிபதியின் செயற்பாட்டை எவ்வளவு பாராட்டினாலும் அது தகும்.

அத்துடன், மத்திய வங்கி ஆளுநர், ஜனாதிபதியின் ஆலோசகர், வர்த்தக அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மஹிந்த சமரசிங்க உள்ளிட்டவர்களும் சிறந்த பங்களிப்பை வழங்கினார்கள். ஒரு குழுவாக நாம் முன்னெடுத்த முயற்சியின் பயனாகவே இந்த சாதகமான பெறுபேறு கிடைக்கப்பெற்றுள்ளது.

வர்த்தகப் பேச்சுகளின்போது இலங்கையால் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை இலக்கை அடையக்கூடியதாக இருந்துள்ளது. வரி விதிகத்தைவிட சர்வதேச சந்தையில் ஏற்படக்கூடிய போட்டியின் போது எமது இடத்தை தக்கவைத்துக் கொள்வதே இலக்காக இருந்தது. தற்போதைய நிலைவரத்துக்கமைய அந்த இலக்கை அடைந்துள்ளோம். சர்வதேச சந்தையில் பிராந்திய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய சூழ்நிலை உள்ளது. வரியை மேலும் குறைத்துக்கொள்வதற்குரிய வழிமுறைகள் பற்றியும் ஆராய்கின்றோம். அமெரிக்கத் தரப்புடனான பேச்சுகள் தொடரும்' - என்றார். (அ-ம-44)

## செம்மணிப்...

நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதையடுத்து செம்மணிப் புதைகுழியில் இதுவரை அவதானிக்கப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 122ஆக உயர்ந்துள்ளது. அத்துடன் நேற்றையதினம் 7 என்புத் தொகுதிகள் முற்றாக மீட்கப்பட்டுள்ளன. இதையடுத்து மீட்கப்பட்ட என்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 112ஆக உயர்ந்துள்ளது. (அ-ம-26)

## இராணுவத்தின்...

யாழ்ப்பாணம் - கோண்டாவில் - உப்புமடம் சந்திப் பகுதியில் இராணுவத்தின் பவுஸரும், தனியார் வாகனமொன்றும் நேற்று விபத்துக்கு உள்ளாகியுள்ளன. இந்த விபத்தில், தனியார் வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## ஆன்மீகப்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வனபதுலே சரணகாரதேரோ (வயது-72) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்றுமுன்தினம் இரவு உறங்கச் சென்ற அவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## புலிகளைப்...

சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் அமைப்புக்கு நிதி வழங்கிய புலம்பெயர் நபர்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முதலீட்டாளர்களாகப் பார்க்கின்றது. வடக்கின் அப்பாவி இளைஞர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளைத் தொங்கவிடுவிவதற்கு நிதி வழங்கியவர்களை முதலீட்டாளர்களாகப் பார்க்கும் அதே அரசாங்கம், போரை முடித்துவைத்த படையினரை குற்றவாளிகளாகப் பார்ப்பது வேதனையானது. புலிகளால் செய்யமுடியாமற் போன சீரழிவை தற்போதைய அரசாங்கம் செய்கின்றது. அதனால்தான் பாடத்திட்டத்தில் இருந்து வரலாற்றுப் பாடத்தை நீக்குவதற்கு முற்படுகின்றனர்' - என்றார். (அ-ம-44)

## வடக்கு...

தெரிவித்துள்ளார். கிளிநொச்சி - பளை பகுதியிலுள்ள பிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில் வடக்கு தெங்கு முக்கோண வலயம் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்தும் வடக்கு மக்களின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவில்லை. போர்க்காலத்தில் மக்கள் எவ்வாறு வறுமைக்குட்பட்டவர்களாக இருந்தனரோ அவ்வாறான வாழ்க்கையைத்தான் இன்றும் வாழ்கின்றனர். வடக்கில் இருந்து வறுமை ஒழிக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். தென்னை பயிர்செய்கை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. குறிப்பாக வடக்கில் இவ்வருடத்தில் 16 ஆயிரம் ஏக்கர் காணியில் தென்னை பயிர்செய்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான காணிகள் தற்போது அடையாளம் காணப்பட்டுவருகின்றன.

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் வறுமை ஒழிப்பை பிரதானமான கொள்கைத் திட்டமாக கொண்டுள்ளது. அதனால்தான், வடக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம் என்றார்.

நிகழ்வில் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், கூட்டுறவு பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலர்கள், அமைச்சக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-113-26)

## நீதிமன்ற...

விசாரணையொன்றுக்காகச் சென்றுவிட்டுத் திரும்பிய நபரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார். பொதுமக்கள் பலர் பார்த்திருக்கையில் இடம்பெற்ற இந்தக் கடத்தல் பல்வேறு அச்சப்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்காகச் சென்றுவிட்டு, மன்னாரில் இருந்து தலைமன்னாரை நோக்கி தனியார் பேருந்தில் பயணித்துள்ளார்.

இதன்போது மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி காட்டாஸ்பத்திரி பகுதியில் குறித்த தனியார் பேருந்தை வழிமறித்த குழுவினர், பேருந்தில் ஏறி கூரிய ஆயுதங்களால் பயணிகளை அச்சுறுத்தி, தாம் தேடிவந்த நபரைத் தாக்கி மோட்டார்சைக்கிளில் கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் அவரை நடுக்குடா பகுதியில் உள்ள காட்டுக்குள் வைத்து கடுமையாகத் தாக்கிவிட்டு கைவிட்டுச் சென்றுள்ளனர். பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய அவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காட்டாஸ்பத்திரி கிராமத்தில் நீண்டகாலமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவருகின்ற குழுவினரே குறித்த நபரை கடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பேசாலை பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பான வீடியோ பதிவுகளும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56)

## மனித...

மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் செம்மணிப் புதைகுழியை ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி பார்வையிடவுள்ளனர். மூன்று ஆணையாளர்கள் மற்றும் இரண்டு பணிப்பாளர்களுடன் யாழ்ப்பாண பிராந்திய அலுவலர்கள் அடங்கிய குழுவினரும் செம்மணிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக காணாமற்போனோர் அலுவலக அதிகாரிகள், மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான நிலையத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் அவர்கள் சந்திப்புகளையும் மேற்கொள்ளவுள்ளனர் - என்றார். (அ-ம-26)

## இணையத்தின்...

நாயகம் [illegible] ஞானதிலக இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 2.4 மில்லியன் நில அளவை வரைபடங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் இனிவரும் காலங்களில் இணையத்தள அணுகல்கள் மூலம் காணிகளின் வரைபடங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான கட்டணத்தை ஒன்லைன்மூலம் செலுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், காணிகள் தொடர்பான தகவல் தரவுத்தளம் காணிப் பதிவுத் திணைக்களத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது காணி தொடர்பான தரவுகளுக்கான அணுகலை மேலும் மேம்படுத்துகிறது - என்றார். (அ-ம-இ)

## செம்மணி....

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கொலை விசாரணைப் பிரிவால் நகர்த்தல் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை மீட்கப்பட்ட புத்தகப்பை, சிறுவர்களின் காலணிகள், குழந்தையின் பாலூட்டும் போத்தல் (போச்சி), வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப் பொருள்களையும் பொதுமக்களின் பார்வைக்காக வைத்து, அடையாளப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இந்தக் கோரிக்கைக்கு, குற்றவியல் சட்டக் கோவையில் நீதிவானுக்கு குறித்துரைக்கப்பட்ட தற்துணிவு அதிகாரங்களின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்தச் சான்றுப்பொருள்களை அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேலதிக நடைமுறைகள் மற்றும் சான்றுப்பொருள்களைப் பார்வையிட வருவோருக்கான கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் இன்று சனிக்கிழமை நீதவானால் அறிவுறுத்தப்படும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26)

## செம்மணியில்...

காயமடைந்த முதியவர் மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த கோபால கிருஷ்ணசாமி லிங்கேஸ்வரன் (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 28ஆம் திகதி காலை செம்மணிப் பகுதியில் சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த மேற்படி நபர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மேலதிக சிகிச்சையின்போது நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணத்தைப் பலப்படுத்துமாக இருந்தால்

# தமிழரசின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயார்!

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2

தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்படும் பரிந்துரைகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பும் ஆவணத்தைப் பலப்படுத்துமாக இருந்தால் அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனீவா அமர்வுகள் இடம்பெறுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் தொடர்பில் பொதுத் தீர்மானம் ஒன்று வரவுள்ளது. எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் செயற்படுவதற்காக நாங்கள் தமிழரசுக் கட்சியை அழைத்தோம். ஆனால் அவர்கள் அதில் கலந்து கொள்ளவில்லை.

அந்த முயற்சியின் இறுதி வடிவமாகத் தற்போது மனுவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட அனைத்து தரப்பினரிடமும் இருந்து கையொப்பங்கள் பெறப்பட்டிருக்கின்றன. தமிழரசுக் கட்சியின் கையொப்பம் மாத்திரமே இப்போது அதில் சேர்க்கப்பட வேண்டும். எனவே, இந்த விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சி தனது முடிவை அறிவிக்க வேண்டியிருக்கின்றது.

தமிரசு கட்சினரின் பிரதான கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாகவும், அதில் எமது அழைப்புத் தொடர்பில் ஆராயப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும், தயாரிக்கப்பட்டுள்ள ஆவணத்தின் பொருளை மாற்றுவது கடினம். ஏனென்றால், அது பலரும் கலந்துரையாடி எடுத்த முடிவு. ஆனால் சொற்பதங்கள் பாவித்த மொழி ஆகியவற்றில் திருத்தங்கள் செய்வதாக இருந்தால் நாங்கள் அதனை பரிசீலிப்பதற்குத் தயார். மேலதிகமாக, நாங்கள் அதில் எழுதி இருக்கின்ற விடயத்தை இன்னமும் பலப்படுத்துவது போன்று திருத்தங்கள் செய்வதாக இருந்தால் நாங்கள் அதையும் பரிசீலிப்பதற்கு தயார். ஆனால் அதில் இருக்கின்ற விடயத்தை அகற்றுவது கடினம். இதுவே எங்களின் நிலைப்பாடு.

எனவே, தமிழரசுக் கட்சியின் முடிவை எதிர்பார்த்துள்ளோம். எனினும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் அந்த ஆவணத்தை இறுதிசெய்து வெளியிடாமல் இருக்க முடியாது - என்றார். (ம-27)

**பணி வெற்றிடங்கள்**

யாழ்ப்பாண நகரில் உள்ள மொபைல் ஷாப்பிற்கு விற்பனையாளர்/ திருத்துநர் அல்லது பழக விரும்புவோர் தேவை.
வயது - 18 - 22
சம்பளம் - 30,000 - 50,000
தொடர்பு: 077 199 6117

**பணிப்பெண் தேவை**

மிருசுவிலில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை
(CR 45687) E
தொடர்புகளுக்கு:
077 880 8659

## கொள்கலன்கள் விடுவிப்பு; விசாரணை அறிக்கை எங்கே?

கொழும்பு, ஓக.2

துறைமுகத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய கொள்கலன்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை ஜனாதிபதி வெளியிடாமல் பதுக்கிவைத்திருப்பது ஏன்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுகத்தில் இருந்து 309 கொள்கலன்கள் விசாரணையின்றி விடுவிக்கப்பட்ட விடயம் தொடர்பில் விசாரிப்பதற்கு ஜனாதிபதியால் விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனினும், அது இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில்கூட சமர்ப்பிக்கப்படவில்லை - என்றார். (ச-44)

**விவசாயிகளுக்கு**

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

**உடனடி வேலைவாய்ப்பு**

வடமராட்சியில் நன்மதிப்பை பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு பல்வேறுபட்ட வேலை வாய்ப்புகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- உற்பத்தியாளர்
- விற்பனையாளர்
- பொதி செய்பவர்
- களஞ்சியக் காப்பாளர்
- கிளை முகாமையாளர்

போன்ற பல்வேறுபட்ட வேலைவாய்ப்புகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும், வேலை பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
(குறிப்பு: இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)
(CS 58990)E
தொடர்புகளுக்கு:
077 269 0764

## சமீபகால அரசியற்போக்கு கலந்துரையாடல் நாளை!

**இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பான கலந்துரையாடலொன்று, நகுலேஸ்வரா வீதியில் அமைந்துள்ள கருகம்பனை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் மாலை 5.30 வரை நடைபெறவுள்ளது.**

2024ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான ஆய்வு, தமிழரசுக்கட்சியின் உள்ளக முரண்பாடுளும் அதன் தேக்க நிலை, தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையும் தமிழ் மக்களின் ஏகமனதான தீர்வின் தேவை போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன.

தற்போதைய அரசியல் சூழலில் தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியலும் எதிர்க்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ள கடுமையாக முயற்சிப்பதே தமிழரசுக் கட்சியின் கடப்பாடாகும். தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் தமிழரசுக்கட்சிக்கு முக்கியமானதொரு பாத்திரம் இருப்பதாக கருதும் கட்சியின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள் அனைவரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்துமாறு கட்சியைச் சேர்ந்த சா.செ.ச.இளங்கோவன், ந.த.வேல்ராஜா ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-25)

## களமோட்டை வயலுக்கான ஆற்றுப்பாலம் இல்லை!

### விவசாயிகள் அவதி

முல்லைத்தீவு, ஓக.2

முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவைப்பிரிவுக்குட்பட்ட மதவளசிங்கன்குளம் நீர்ப்பாசனக் குளத்தின் கீழுள்ள களமோட்டை வயல்பகுதிக்கு ஆற்றைக் கடந்துசெல்வதற்குப் பாலம் இன்மையால் விவசாயிகள் பெரும் இடர்பாடுகளை முகங்கொடுத்துவருகின்றனர்.

களமோட்டைப்பகுதியில் 220ஏக்கர் வயல்நிலங்களில் பெரும்போகம் மற்றும் சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

குறித்த களமோட்டை வயல்பகுதிக்குச் செல்லும் வழியின் குறுக்கே உள்ள ஆற்றைக் கடந்துசெல்வதற்குப் பாலமொன்று இன்மையால் நெற்பயிற்செய்கைக் காலத்தில் நிலப்பண்படுத்தலுக்கு உழவியந்திரத்தைக் கொண்டுசெல்லுதல், விவசாய உள்ளீடுகளை எடுத்துச்செல்லுதல், விவசாய நிலங்களுக்கான காவலுக்குச் செல்லுதல், அறுவடைக்காலத்தில் அறுவடை இயந்திரத்தைக் கொண்டுசெல்வது, அறுவடையை எடுத்துச்செல்வது உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் 35அடி தூரமான ஆற்றைக் கடப்பதற்குப்பதிலாக 15 கிலோமீற்றர் சுற்றியே எமது விவசாய நிலங் களுக்குச் செல்லவேண்டிய அவல நிலை காணப்படுகின்றது என்றும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இந்தநிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விவசாயிகளின் கோரிக்கைக்கமைய நேரில் சென்று பார்வையிட்டு குறித்த ஆற்றுப்பாலத்தை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார். (ச-26,246)



நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தில் பின்வீதியில் நல்லை ஆதீனத்துக்கு முன்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கும் பந்தல் ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது. (ச-41-17)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org